**IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT**

| | | | | |
|---|---|---|---|---|
| | | OS. No. | | 51/2021 |
| | | P/W's | : | PW3 |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | வினோத்குமார் | CASTE | : | |
| S/O | கர்ணன் | RELIGION | : | இந்து |
| VILLAGE | தென்கரை | CALLING | : | |
| TALUK | வாடிப்பட்டி | AGE | : | 37 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 01.12.2025**

**<u>1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. எனது நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை வாதிதான் சொன்னார். வழக்குச்சம்பந்தமான ஆவணங்களை நான் பார்த்துள்ளேன். வழக்குச்சொத்தான வீட்டிற்கு மேற்குப்புறம் உள்ள காலியிடத்தைக்கேட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 மாதிரி வரைபடத்தில் வழக்குச்சொத்தான வீட்டிற்கு மேற்கே தென்கரை முதலியாரின் பொதுச்சாவடி உள்ளதாகவும் கிழக்கே தனலெட்சுமி இடம் உள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. வா.சா.ஆ.1 வரைபடத்தின் படி வழக்குச்சொத்து கிழமேல் 101 அடி, தென்வடல் 22 அடி உள்ளது. வழக்குச்சொத்து ஆரம்பத்தில் எனது கொள்ளுபாட்டி ராக்கம்மாள் கிரையம் வாங்கினார். வழக்குச்சொத்தின் மேற்குப்பக்கம் உள்ள தென்கரை முதலியார் பொதுச்சாவடி அவர்களின் பட்டாபடி சரியாக இல்லை. மேற்படி விவரத்தை 2021 ல் தெரிந்துகொண்டோம். 2021 க்கு முன்பு எங்களுக்கு பாத்தியப்பட்ட வீடும் அதன் பின்பக்கம் காலியிடம் மட்டும்தான் இருந்தது என்றால் சரிதான். எனது பாட்டி ராக்கம்மாள் வழக்குச்சொத்தை யாரிடம் கிரையம் வாங்கினார் என்று எனக்குத்தெரியாது.

3. ராக்கம்மாள் சொத்தை அவரது திருமணத்திற்கு முன்பு வாங்கினாரா அல்லது திருமணத்திற்கு பின்பு வாங்கினாரா என்று எனக்குத்தெரியாது. ராக்கம்மாளின் உடன்பிறந்த சகோதரர்தான் தனலெட்சுமியின் கணவரான ராமன்சேர்வை என்றால்

சரிதான். வா.சா.ஆ.3 கிரையப்பத்திரத்தில் 'வீடு, கொல்லை காலிமனை' கிரையம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் வாதிக்குத்தான் தெரியும். மேலும் அந்தப்பத்திரத்தில் நான்குமால் எல்லைகள் கிழமேல் சுவர் பூரா பாத்தியம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4. எனது அப்பா மற்றும் பெரியப்பா 2017 ல் அவர்களது சொத்துக்களை பிரித்துக்கொண்டார்கள். பாகப்பிரிவினையின்படி யாருக்கு என்ன பாகம் கிடைத்தது என்றால் வடக்குப்புறம் இருந்த பழையவீடு வாதியின் தகப்பனாருக்கும், அதற்கு தெற்கேயுள்ள காலிமனை எனது தகப்பனாருக்கும், அந்த இடத்தில் தற்போது வீடு கட்டியுள்ளோம், அதற்கும் தெற்கே இருந்த காலியிடம் எனது சித்தப்பா தெய்வேந்தரனுக்கும், அதற்கும் தெற்கேயுள்ள காலிமனை எனது சித்தப்பா ராமலிங்கத்திற்கு என்று பிரித்துக்கொள்ளப்பட்டது.

5. 2017 க்கு முன் பாகம் பிரிக்கப்படாத எங்கள் முழுச்சொத்தை சர்வேயர் வைத்து அளந்து பார்க்கவில்லை என்றால் சரிதான். இன்றையதேதி வரை சொத்தை சர்வேயர் வைத்து அளந்து பார்க்கவில்லை. மேற்சொன்ன நான்கு பாகத்தில் யாருக்கு என்ன விஸ்தீரணம் கிடைத்தது என்றால் ஒவ்வொருவருக்கும் 22 x 25 சதுரடி கிடைத்தது. மேற்படி பாகத்தை VAO அளந்துகொடுத்தார். 2017 ல் எங்கள் பாகச்சொத்துக்களை VAO வைத்து அளந்துவிட்டு எல்லைக்கல்லோ, வேலியோ அமைக்கவில்லை என்றால் சரிதான்.

6. எங்கள் பட்டாபடி நிலம் இல்லாமல் குறைவாக உள்ளது என்று நீதிமன்றத்தில் மனு கொடுத்துள்ளோம். மற்ற பங்குதாரர்களை வாதிகளாக வழக்கில் சேர்க்கவில்லை என்றால் 2 பங்குதாரர்கள் அவர்கள் நிலங்களை விற்றுவிட்டார்கள். எனக்கும்சேர்த்து வாதிதான் வழக்கு நடத்துகிறார். தெய்வேந்திரன் வாதிக்கு 05.02.2013 அன்று அவரது பங்கு நிலத்தை விற்றுவிட்டதாக எனது வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 2017 ல்தான் பாகம் பிரிக்கப்பட்டது என்றாலும் தெய்வேந்திரன் அவரது பிரிக்கப்படாத பாகத்தை 2013 ல் வாதிக்கு விற்பனை செய்தார் என்றால் சரிதான்.

7. எங்கள் இடத்தையும் கிழக்கேயுள்ள தனலெட்சுமி இடத்தையும் சேர்த்தால்தான் கிழமேல் 22 அடி வரும் என்றால் சரியல்ல. கிழக்குப்புறம் எங்கள் இடத்திற்கும் தனலெட்சுமி இடத்திற்கும் இடையேயுள்ள சுவர் பொதுச்சுவர் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் சிமெண்ட் சீட் போட்ட பச்சைநிற வீடு வாதியின் வீடு என்றாலும் அதன் அருகேயுள்ளது தனலெட்சுமி வீடு என்றாலும் சரிதான். மேற்படி **புகைப்படம் பி.வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் எனது வீட்டிற்கு மேற்குப்புறம் உள்ள காலியிடம் உள்ளது என்றால் சரிதான்.மேற்படி **புகைப்படம் பி.வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பி.வா.சா.ஆ.3 புகைப்படத்தில் உள்ள கோவில் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றாலும், அந்த புகைப்படத்தில் வீட்டை ஒட்டியுள்ள மரங்கள் எங்களுக்கு சொந்தமானது என்றால் சரிதான். மேற்படி புகைப்படத்தில் உள்ள காலியிடம்தான் எங்கள் இடம் என்று வழக்கு தாக்கால் செய்துள்ளோம். பி.வா.சா.ஆ.1 படி வழக்குச்சொத்தை அளக்க அறிவிப்பு வழங்கப்பட்டது என்றால் எனக்குத்தெரியாது.

9. பி.வா.சா.ஆ.1 அறிவிப்பில் பின்பக்கம் உள்ள கர்ணன் என்ற முதல் கையெழுத்து எனது அப்பாவுடையது என்றால் சரிதான். இந்த கையெழுத்தை எனது அப்பா எதற்காக போட்டார் என்று எனக்குத்தெரியாது. மேற்படி அறிவிப்பின்படி சர்வேயர் சொத்தை அளந்து காட்டினார் என்றால் எனக்குத்தெரியாது. காலிமனையாக பாகம் பெற்று வடக்குப்புறம் வாசல் வைத்து வீடு கட்டினோம். 2019 ல் மேற்குப்புறம் வாசலாக மாற்றிவிட்டோம். ராக்கம்மாள் கிரையம் பெற்று அந்தச்சொத்தை 11 அடியாக பிரித்து அனுபவம் செய்துவந்தோம் என்றாலும் அதனால்தான் எங்களுக்கு இடையுள்ள சுவர் பொதுச்சுவராக உள்ளது என்றாலும் எங்கள் வீட்டிற்கு அடுத்துவுள்ள மேற்குப்புறமுள்ள காலியிடம் எங்களுக்கு சொந்தமில்லை என்றாலும் சரியல்ல.

10. எங்கள் வீட்டிற்கு மேற்கே கிணறு இருந்தது என்றால் சரிதான். வீட்டின்வாசல் அருகே இருந்தது. அதை மூடிவிட்டோம். அந்த கிணறை யார் தோண்டியது என்று தெரியாது. நான் பிறக்கும் முன்பிருந்தே இருந்தது. அந்த கிணற்றை பற்றி எங்கள் பழைய பத்திரங்களில் சொல்லியிருப்பார்கள் என்றால் சரிதான். எங்கள் பத்திரத்தில்

குறிப்பிடவில்லை என்றால் அந்த கிணறு எங்களுக்கு பாத்தியம் இல்லை என்றால் சரியல்ல. 1948 ன் பத்திரத்தில் கிணறு பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

11. வழக்குச்சொத்திற்கான பட்டா எனது தாத்தா பெரியகருப்பன் பெயரில் இருந்தது என்றால் எனக்குத்தெரியாது. வழக்குச்சம்பந்தமாகவும், அதன் ஆவணங்கள் சம்பந்தமாகவும் எனக்கு தெரியாது என்றாலும் வாதி கேட்டுள்ளதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

//True copy//
Sd/– M.P.Ramkishore
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.